2022 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் அடிப்படையில் இதுவரையில் தமிழ்நாட்டில் 36 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, சுமார் 50,000–க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு தனியார் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடர்ந்து இதுபோன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு முகாம் நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, தமிழ்நாடு முழுவதிலும், அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாமை நடத்தி, அந்தந்த மாவட்டங்களில் வேலைவாய்ப்பை நிச்சயமாக உருவாக்கித் தருவோம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***3857—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2022 மார்ச் 23

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றபின் எடுத்திருக்கக்கூடிய சீரிய நடவடிக்கைகளின் மூலமாக தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவைகள் சார்ந்த நிறுவனங்கள் மூலமாக வருகின்ற நிதியாண்டில் 25 சதவிகிதத்திற்குமேல் வருவாய் வளர்ச்சி ஏற்படுமென்று இன்றைக்கு பல்வேறு பொருளாதார அமைப்புகள் கணித்திருக்கின்றன. அதேபோன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய 2 ஆம் நிலை, 3 ஆம் நிலை நகரங்களில், அங்கிருக்கக்கூடிய தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கும், வருவாயைப் பெருக்குவதற்கும், படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும் அங்கே தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் அறிவித்து, அதற்கான ஆக்கப்பூர்வமான பணிகளை இந்தத் துறை மேற்கொண்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் எழுதி அந்த நிலங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

*கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் பலர் இருக்கின்றார்கள். ஆனாலும், நம்முடைய நிறுவனங்களுக்குத் தேவையான தொழில் திறன்–*Employability Skill, *வேலைவாய்ப்பிற்குத் தேவையான தொழில் திறனில் ஒரு சிறிய இடைவெளி இருப்பதாகத் தெரிகிறது. அதைப் போக்குவதற்கு தகவல் தொழில்நுட்பத் துறையின்கீழ் உள்ள* ICT Academy *என்ற நிறுவனத்தின் மூலமாக இந்த ஆண்டு மிகத் தெளிவாகத் திட்டமிட்டு, மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பயிற்சியளித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதற்கான இடம் தேர்வு செய்து தரக் கோரியதன்படி, அவர்களும் ஒருசில இடங்களைத் தேர்வு செய்து அனுப்பியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அங்கே சென்று பார்வையிட்டு, எந்த இடம் சரியாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, அங்கு நிச்சயமாக* IT Park *தொடங்குவதற்கான பணிகள் நடைபெறும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

2022 மார்ச் 23]

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியில் மிக விரைவில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும் என்ற ஒரு வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள். அதற்கான இடம் தேர்வு செய்யப்படுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். விரைவில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் மிகச் சிறிய மாவட்டம். படித்தவர்கள் அதிகமுள்ள மாவட்டம். இந்த மாவட்டத்தில் 30-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள், 25-க்கும் அதிகமான கலை, அறிவியல் கல்லூரிகள், சுமார் 20-க்கும் மேலான தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளன. எனவே, படித்த இளைஞர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் உடனடியாக அங்கு தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி சொல்லி, விடைபெறுகிறேன்.* Jai Hind.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் உள்ள படித்த இளைஞர்களுக்கு,* Deep technologies *என்று சொல்லக்கூடிய ஆழ்நிலை திறன்கள், அதேபோன்று* Emerging technologies, *வளர்ந்துவரும் திறன்கள் போன்றவற்றை வழங்குவதற்கான முழுமையான திட்டத்தை நாம் செயல்படுத்தவிருக்கிறோம் என்பதை இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள், நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும்கூட, எங்கள் மாவட்டத்திலுள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பை நாடி வெளி மாவட்டங்களுக்குச் செல்வதைக் குறைப்பதற்காக, படித்த இளைஞர்களுக்கும், பட்டம் பெற்ற இளைஞர்களுக்கும்*

நல்ல திறன் மேம்பாட்டை உருவாக்குவதற்காக அந்தப் பகுதிகளில் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலமாக சிறப்புப் பயிற்சி மையத்தை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி. Jai Hind.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், Deep technologies என்று சொல்லப்படுகின்ற ஆழ்நிலை திறன்கள், அதேபோன்று Emerging technologies, உலகம் முழுவதும் தேவைப்படுகின்ற, வளர்ந்து வருகின்ற தொழில் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கின்றது. ஏனென்றால், ஆண்டொன்றிற்கு நான்கரை இலட்சம் படித்த இளைஞர்கள் கல்லூரிகளைவிட்டு வெளியே வருகின்றார்கள். ஆனால், அத்தனை பேருக்கும் வேலை கிடைக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. ஒரு பக்கத்தில் சான்றுகளோடு இளைஞர்களும், இன்னொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் இருக்கிறது. அதே சமயத்தில், நிறுவனங்களுக்குத் தேவையான திறன்களோடு இளைஞர்கள் கிடைப்பதில் சில சவால்கள் இருக்கின்றன என்று அந்த நிறுவனங்கள் சொல்கின்றன. இதைத் தற்போது தெளிவாகக் கண்டறிந்து, அவர்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சிகளை வழங்கவிருக்கின்றோம்.

நாங்கள் முதலில் பயிற்சி மையங்களை ஏற்படுத்தவில்லை என்று சொன்னாலும், ICT Academy-ல் நம்முடைய மாநிலத்திலுள்ள 1,224 கல்லூரிகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. அவற்றை ஒருங்கிணைத்து, அதில் சில பகுதிகளைக் கண்டறிந்து, அங்கு நாம் பயிற்சி நடத்தவிருக்கின்றோம். இந்த மாதம் 28 ஆம் தேதியன்று Bridge என்று ஒரு நிகழ்வை கன்னியாகுமரியில் நடத்துவதற்குத் திட்டமிட்டு, அதற்கான நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினருக்கு அதற்கான அழைப்பை நாங்கள் அனுப்பவிருக்கின்றோம். ஆகவே, நிச்சயமாக திறன் மேம்பாட்டை வளர்த்து, வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக, Employability skill, Industries-க்கு ready ஆக, தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறனைக் கொடுக்கின்ற பணியை மிகத் தீவிரமாகத் திட்டமிட்டு இந்த ஆண்டு செயல்படுத்தவிருக்கின்றோம். மாண்புமிகு முதல்வர்

2022 மார்ச் 23]

அவர்கள் அதற்கான தெளிவான வழிகாட்டுதல்களை எங்களுக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். அதன்மூலமாகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனவான 'one trillion dollar economy' *என்பதையும் நாம் நிறைவேற்ற முடியும். அதற்காகப் பணியாற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

சுற்றுலா மாளிகை

***7379—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா?

முற்பகல் 11–20

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் முதலில் வணங்குகிறேன். பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் அணுகு சாலை வசதிகள் கடந்த ஆண்டுகளில் சுற்றுலாத் துறையின் சார்பாக ரூ.76.22 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் கோயில் பகுதியில் கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின், அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய துறையிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS